இந்தியா – வளங்கள் மற்றும் தொழிலகங்கள்

I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. மாங்கனீசு இவற்றில் பயன்படுத்தப்படுகிறது.
   அ) சேமிப்பு மின்கலன்கள் ஆ) எஃகு தயாரிப்பு
   இ) செம்பு உருக்குதல் ஈ) பெட்ரோலிய சுத்திகரிப்பு

2. ஆந்த்ரசைட் நிலக்கரி _____ கார்பன் அளவை கொண்டுள்ளது.
   அ) 80% - 95% ஆ) 70% க்கு மேல்
   இ) 60% - 70% ஈ) 50% க்கும் குறைவு

3. பெட்ரோலியத்தில் உள்ள முக்கிய கனிமங்கள் ஹைட்ரஜன் மற்றும் _____.
   அ) ஆக்ஸிஜன் ஆ) நீர்
   இ) கார்பன் ஈ) நைட்ரஜன்

4. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம் _____.
   அ) சேலம் ஆ) சென்னை
   இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்

5. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம்
   அ) குஜராத் ஆ) இராஜஸ்தான்
   இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு

6. மிக அதிகமாக கிடைக்ககூடிய ஆற்றல் வளம்
   அ) உயிரி சக்தி ஆ) சூரியன்
   இ) நிலக்கரி ஈ) எண்ணெய்

7. புகழ்பெற்ற சிந்திரி உரத் தொழிலகம் அமைந்துள்ள மாநிலம்
   அ) ஜார்கண்ட் ஆ) பீகார்
   இ) இராஜஸ்தான் ஈ) அசாம்

8. சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு கருவாக இருப்பது
   அ) போக்குவரத்து ஆ) கனிமப்படிவுகள்
   இ) பெரும் தேவை ஈ) மின்சக்தி சக்தி கிடைப்பது